செ.வெ.எண்:12 நாள்:09.09.2017

# ஆழியாறு பழைய ஆயக்கட்டின் ஒரு போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட உள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!

கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஆழியாறு பழைய ஆயக்கட்டின் ஒரு போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட தமிழக அரசு ஆணையிட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன் இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.09.2017) வெளியிட்ட செய்திகுறிப்பில் தெரிவித்ததாவது,

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆழியாறு பழைய ஆயக்கட்டின் ஒரு போக பாசனத்திற்கு, நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தினை பொறுத்து 10.09.2017 முதல் 08.01.2018 முடிய 120 நாட்களுக்கு மொத்தம் 800 மி.க.அடிக்கு மிகாமல் ஆழியார் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது

மேலும், நஞ்சை பாசனத்திற்கு அழியாறு அணை பழைய ஆழியாறு ஆயக்கட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் 5 வாய்க்கால்களிலிருந்து தண்ணீர் திறந்துவிடபட உள்ளது. இதனால் 6400 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும்.

ஆழியாறு, கோட்டூர், ஆணைமலை ஆகிய பகுதிளுக்குட்பட்ட விவசாயிகள் நெல் பயிரிடுவதற்கு ஏதுவாக இந்த தண்ணீர் திறப்பு அமையும். இதனை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு விவசாயிகள் பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**